014
Mathy vathan
Bi
057

அருள் மிகு திருமுருகன் கோவில்
மொன்றியால்

பண்ணிசைப் போட்டி-2000

கியூபெக்சைவ மகாசபை
Saiva Mission Of Quebec
1611 St. Regis Blvd
D.D.O. QC
H9B-3H7
Tel: (514) 683-8044

உள்ளடக்கம்

பக்கம்

அறிவித்தல்..... 3

போட்டி நிபந்தனைகள்..... 5

போட்டிப் பிரிவுகள்..... 7

தேர்ச்சிக்கான பாடல்கள்

1. மழலையர் பிரிவு..... 9
2. கீழ்ப்பிரிவு..... 11
3. இடைநிலைப் பிரிவு..... 13
4. மேற்பரிவு..... 17
5. உயர்பிரிவு..... 21

உ

சிவமயம்

அருள் மிகு திருமுருகன் கோவில் மொன்றியால்

பண்ணிசைப் போட்டி-2000

அன்புடையீர்,

கியூபெக் சைவமகா சபையினரால் ஆண்டு தோறும் நடாத்தப் பெற்று வரும் பண்ணிசைப் போட்டியின் ஏழாவது நிகழ்வு இவ்வாண்டு டிசெம்பர் மாதம் 18ம் திகதி சனிக்கிழமையன்று (12-18-1999) இடம் பெறவுள்ளது. இப் போட்டியானது ஐந்து பிரிவுகளில் நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் வெற்றிபெற்ற முதல் மூவருக்கும் சிறப்புப்பரிசில்களும் தேர்ச்சி பெற்ற போட்டியாளர் என நடுவர்களால் கணிக்கப்பட்ட ஏனையோர்க்குத் தேர்ச்சிச் சான்றிதழ்களும் வழங்கப்படும். போட்டிக்கான நுழைவுக்கடடணம் 5:00 டொலர்கள் ஆகும்.

தொடர்ந்து வரும் பக்கங்களில் போட்டிபற்றிய ஏனைய விபரங்கள் தரப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் தேவைப்படின் (514)-683-8044 என்ற இலக்கத்தில் கோவிற்பணிமனை அலுவலருடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

2000ம் ஆண்டு தைத்திங்கள் நடைபெறவுள்ள பொங்கல் விழாவில் வெற்றி பெற்றோரையும் தேர்ச்சி பெற்றோரையும் சிறப்பிப்பதென முடிவு செய்துள்ளோம்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

10-25-1999

ஒழுங்குபடுத்தற் குழவினர்
கியூபெக் சைவமகாசபை

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/thirumurugantemp00unse_3

போட்டி நிபந்தனைகள்

(1) கனடாவில் வாழும் எவரும் போட்டியில் பங்கு பெறும் தகமையுடையவர்.

(2) போட்டித்தினத்தன்று தமது மருத்துவ அட்டையைச் சமர்ப்பிப்பதன் மூலம் போட்டியாளர் தமது தகைமையை நிறுவுதல் வேண்டும்.

(3) விண்ணப்பப்படிவங்கள் 1999 டிசெம்பர் முதலாம் திகதியன்றோ (12-01-1999) அதற்கு முன்பதாகவோ கோவிற் பணிமனையிற் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். போட்டிகள் 1999 டிசெம்பர் 18ம் திகதியன்று (12-18-1999) நடைபெறும். தகுந்த காரணங்களுக்காகப் போட்டியை ஒத்தி வைக்கும் அதிகாரம் கீயூபெக் சைவமகா சபைக்கு உண்டு.

(4) தேர்ச்சிக்குரிய தேவாரங்கள் அனைத்தும் விதிக்கப்பட்ட பண்ணுடனேயே பாடப்படுதல் வேண்டும. தேவாரங்கள் தவிர்ந்த ஏனைய பாடல்களில் தகுந்த இசைத்தேர்ச்சி ஏற்புடையதாக கணிக்கப்படும். போட்டியாளரொருவர் விரும்பின் சுருதிப்பெட்டியொன்றின் பாவனைக்கு அனுமதி வழங்கப்படும்.

(5) போட்டி சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் நடுவர்களின் தீர்ப்பு இறுதியானதும் மாற்றமுடியாததுமாகும்.கியூபெக் சைவமகா சபையானது இது சம்பந்தமாக எதுவித பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபடமாட்டாது.

(6) போட்டி நடைபெறும் மண்டபத்துள் புகைப்படக் கருவிகளோ சலனப் படக்கருவிகளோ ஒலிப்பதிவுக்கருவிகளோ கவனத்தைத் திசை திருப்பும் வேறெந்தப் பொருட்களோ அனுமதிக்கப்படமாட்டா.

போட்டிப்பிரிவுகள்

பிரிவு	வயதெல்லை	தேவாரம்	திருவாசகம்	திருவிசைப்பா	திருப்பல்லாண்டு	திருப்புராணம்	திருப்புகழ்
மழலையர் பிரிவு	1994-12-01 அல்லது அதன் பின் பிறந்தோர்	X				X	
கீழ்ப்பிரிவு	1991-12-01 அல்லது அதன் பின் பிறந்தோர்	X	X			X	
இடைநிலைப் பிரிவு	1988-12-01 அல்லது அதன் பின் பிறந்தோர்	X	X			X	X
மேற்பிரிவு	1985-12-01 அல்லது அதன் பின் பிறந்தோர்	X	X	X	X	X	X
உயர்பிரிவு	1981-12-01 அல்லது அதன் பின் பிறந்தோர்	X	X	X	X	X	X

மழலையர் பிரிவு

தேவாரம்: பூவினுக் கருங்கலம்

திருப்புராணம்: உலகெலா முணர்ந்து

தேவாரம் பண்:காந்தாரபஞ்சமம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சிவாயவே.

திருப்புராணம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

கீழ்ப்பிரிவு

தேவாரம்: மண்ணில் நல்ல

திருவாசகம்: அம்மையே அப்பா

திருப்புராணம்: ஆதியாய் நடுவுமாகி

தேவாரம்

பண்: கொல்லி

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்ல.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும்பெருந்தகை இருந்ததே!

திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித் தோன்றியபொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் சில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

இடை நிலைப்பிரிவு

தேவாரம்: நிரைகழலரவம்

திருவாசகம்: பாரொடு விண்ணாய்

திருப்புராணம்: அருவமும் உருவுமாகி

திருப்புகழ்: உம்பர் தருத்தேனுமணிக்

தேவாரம் பண்:புறநீர்மை

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநாஞ்மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுகத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

திருப்புராணம்

அருவமும் உருவுமாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய.

திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுப்பெருமாளே

மேற்பிரிவு

தேவாரம்: தாயினும் நல்ல தலைவர் என்றடியார்
திருவாசகம்: பால்நினைந் தூட்டும
திருவிசைப்பா: ஏகநாயகனை இமயவற்கரசை
திருப்புராணம்: ஐந்துபேரறிவும் கண்களே
திருப்புகழ்: பக்தியால் யானுனைப்
திருப்பல்லாண்டு: தீதில நிதியம் லாலிய

தேவாரம்

பண்:புறநீர்மை

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்து மருவிநின்ற கலா
மாண்பினர் காண்பலவேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருவிசைப்பா

ஏக நாயகனை இமயவர்க் கரசை
என்உயிர்க் கமுதினை, எதிரில்
போக நாயகனை புயல்வணற் கருளிப்
பொன்நெடும் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே!

திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையிற் தனிப்பெரும் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஓப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

உயர்பிரிவு

தேவாரம்: மாதர் மடப்பிடியும்
திருவாசகம்: மெய்தானரும்பி
திருவிசைப்பா: சுருதி வானவனாந்
திருப்பல்லாண்டு: குழலொலி யாழொலி
திருப்புராணம்: ஞானத்தின் திருவுருவ
திருப்புகழ்: திருமகளுலாவு மிருபுயமுராரி

தேவாரம் பண்: யாழ்முரி

மாதர்ம டப்பிடியும் மடவன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக டுணையென மகிழ்வார்
பூதவினப்படைநின் றிசைபாடவு மாடுவர்
அவர் படர் சடைநெடு முடியதொர் புனலர்
வேதமொடு ஏழிசைபாடுவ ராழ்கடல் வெண்டிரை
இரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயிறரும புரம்பதியே.

திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சய சய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக்கண்டு கொள்ளே.

திருவிசைப்பா

சுருதிவா னவனாந் திருநெடு மாலாஞ்
சுந்தர விசும்பி னிந்திரனாம்
பருதிவா னவனாம் படர்சடை முக்கட்
பகவனா மகவுயிர்க் கமுதாம்
எருதுவா கனனாம் எயில்கண்முன்னெரித்த
ஏறுசே வகனுமாம் பின்னும்
கருதுவார் கருது முருவமாங் கங்கை
கொண்டசோ ழேச்சரத் தானே.

திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகு திரு வாரூரின்
மழவிடை யாற்கு வழி வழியாளாய்
மணஞ்செய் குடிப் பிறந்த
பழவடி யாரொடும் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம்

ஞானத்தின் திருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார்சீர் தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டாகள்.

திருப்புகழ்

திருமகளுலாவு மிருபுயமுராரி திருமருக நாமப்
பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதி பெறு பாடல் தெரிதருகு மாரப்
பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளை யாடு மரகதம யூரப்
பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ மருவுகதிர் காமப்
பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர்மாள அமர்பொருத வீரப்
பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரிவுசடை வேணி அமலர்குரு நாதப்
பெருமாள்காண்
இருவினை யிலாத தருவினைவி டாத இமயவர்கு லேசப்
பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார இருதனவி நோதப்
பெருமாளே.

014